# சுட்டி 60

மாத இதழ்
60 காசு
பெப்ரவரி '86




FREE E - BOOKS , www.thamizham.net.,

FREE E - BOOKS , www.thamizham.net.,



FREE E - BOOKS , www.thamizham.net.,

# நண்பர்களே!

இந்த இதழுடன் சுட்டிக்கு வயது 60 மாதங்கள். மனிதரின் வயதுப்படி கணக்கிட்டால் சுட்டிக்கு வயது ஐந்து. இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் சுட்டி பொருளாதார நெருக்கடி என்னும் நோய் வாய்ப் பட்ட போது, சந்தாவாலும், ஆயுள் சந்தாவாலும் முகவர் பணி செய்தும் உயிர் காத்த நண்பர்களுக்கும், தமது சீரிய படைப்புகளாலும், ஊக்குவிக்கும் மடல்களாலும், தட்டிக் கொடுத்து உற்சாக மூட்டிய அன்பர்களுக்கும் சுட்டி ஆசிரியர் குழு மனம் திறந்த பாராட்டுக்களையும், நன்றியையும் சமர்ப்பிக்கின்றது.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பதைப் போல, இந்த ஐந்து வயதில் பாபம் கருதி எந்த நலிவு சக்திக்கும் வளைந்து கொடுக்கவில்லை. இனி எக்காலத்திலும் சுட்டி அச்சக்திகளுக்கு வளைந்து கொடுக்காது.

சமுதாயத்தில் இனியும் சுட்ட வேண்டிய, இதுவரை சுட்டப்படாதவைகளை சுட்டிக் காட்ட வாசக அன்பர்களை அழைக்கிறோம். இதுவரை சுட்டி சுட்டிக் காட்டிய கலாச்சார - சமுதாய மாறுதல்கள் ஒரு சிலவற்றையேனும் வாசக அன்பர்கள் நடைமுறைப் படுத்துவதும், சுட்டியின் ஆன்மாவைப் பலப்படுத்தும்.

சந்தாவைப் புதுப்பித்தும், இயன்றோர் ஆயுள் சந்தா அளித்தும், முகவர்கள் தமது சீரிய ஒத்துழைப்பை நல்கியும் உதவுவார்களென நம்பிக்கை- நம்பிக்கையுடன் எதிர் பார்க்கிறோம்!

பிற உங்களிடமிருந்து!

- அன்புடன்
ஆசிரியர் குழு.

FREE E - BOOKS , www.thamizham.net.,

சாலைகள், தெருக்களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த காவல்துறையினரால் இயலவில்லையோ என்னவோ, இரண்டு யானைகளை அவ்வேலையில் ஈடுபடுத்தியுள்ளனர். இது நடப்பது திருச்சி - ஸ்ரீரங்கத்தில்தான்.

# போலீஸ் யானைகள்



போலீஸாரின் கெடுபிடிகளுக்கு சவால் கொடுத்துக்கொண்டு தமது வியாபாரமே குறிக்கோளாகவும், பொதுமக்களின் போக்குவரவுக்கு இடையூறு செய்யும் வியாபாரிகளாகவும் இருக்கும் இவர்களுக்கு இந்த யானைகள் காலனாகத் தோன்றுகின்றன

இந்த இரண்டு யானைகளுக்கும் போலீஸ் துறை உணவு வழங்குகிறது. மாவுத்தர்கள், யானைகளை இவ்வேலை செய்யப் பழக்கியுள்ளனர். எந்த நடைபாதை காய்கறி வியாபாரியாவது சாலையினுள் தனது கூடையை நகர்த்தினால் போதும்; இந்த யானைகள் தமது முன்னங்கால்களை உயர்த்தி, வியாபாரியை அச்சுறுத்துவதுடன் தும்பிக்கையால் கூடையை லேசாகப் பின்னுக்குத் தள்ளி விடுகிறது. அதே போல, சாலைகளில், கண்ட இடங்களில் மிதிவண்டிகளை நிறுத்தி போக்குவரத்துக்கு இடையூறு செய்பவர்களையும் இவை விடுவதில்லை. மிதிவண்டிகளை அலாக்காகத்தூக்கி ஒதுக்குப் புறத்தில் போட்டு விடுகின்றன. என்ன

FREE E - BOOKS , www.thamizham.net.,




கெஞ்சினாலும் புண்ணியமில்லை. இவை முன்பாதி.

**பின் பாதி:**

யானைகள் எல்லா மனிதர்களையும் பாரபட்சமின்றிக் கவனிக்கும் என்று யாரும் எண்ணக் கூடும். ஆனால், அவையும் காலத்திற்கேற்ப மாறி விட்டன. தமது மாவுத்தனிடம் 25 காசு கொடுத்தவர்களின் மிதிவண்டியை இவை ஒதுக்கித் தள்ளுவதில்லை. 25 காசுகளுக்குக் குறைவாக யாரும் கொடுத்தால் விசிறி அடித்து விடுகின்றன. யானைகளுக்குக் கூட பணத்தின் முக்கியத்துவம் தெரிந்திருக்கிறது. மனிதன் போய் யானை வந்த போதும் லஞ்சம் போகவில்லை.


படித்துப் பயன்பெற வேண்டிய நூல்!

பாரதியின் குயில் பாட்டு விளக்கம்



—டாக்டர் மின்னூர் சீனிவாசன்

நூல் விலை: 10 ரூபாய். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மின்னூர் வெளியீடு. 22/7, தீர்த்தாரப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

“திறனாய்வு உலகிற்கு, மின்னூர் சீனிவாசன் மற்றொரு பாரதியார்; மற்றொரு பாரதிதாசன்.”

பன்மொழிப்புலவர். கா. அப்பாதுரையார்.

ADVT.


FREE E - BOOKS , www.thamizham.net.,

# தென் ஆப்பிரிக்காவில் இன்று...

தென் ஆப்பிரிக்கா - இன்றைய பூபாகத்தின் கொந்தளிப்பான பிரதேசம். பேய்கள் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்ற பழமொழியை அரங்கேற்றி வரும் தேசம்.

அடிமைத் தனத்தின் கொடூரங்களுக்கும் அடக்குமுறையின் ஆர்ப்பாட்டங்களுக்கும் எல்லையில்லை.



பத்திரிகைகள் - பல்வேறு நாடுகளின் இயக்கங்கள் - ஐ.நா. போன்ற உலக அமைப்புகள் போன்றவற்றில் அதிகமாக உச்சரிக்கப்படும் பெயர் தென் ஆப்பிரிக்கா. அங்கேயே பிறந்து காலாகாலமாக வாழ்ந்து வரும் இரண்டரை கோடி கறுப்பு மக்களை வயிறு வளர்க்க வந்து புகுந்த 5 லட்சம் வெள்ளையர்கள் ஆட்டிப் படைக்கிறார்கள்.

நாடு இவர்களுக்குச் சொந்தம். ஆனால் நாடாளுமன்றமோ அவர்களுக்குச் சொந்தம். இந்த மக்கள் கேட்பதெல்லாம் ஓட்டுரிமை மட்டுமே. அது கூட இல்லை என்று இந்த அணுயுகத்தில் சொல்கிறார்கள்! உருக்கு நெஞ்சங்களைத் திரட்டி உரத்த குரலில் உரிமை கேட்டதாலேயே 23 வருடங்களாக நெல்சன் மண்டேலாவை சிறையில் தள்ளியிருக்கிறார்கள். அவரது மனைவி வின்னி மண்டேலாவை பிறந்த நகருக்குள்ளேயே நுழையக் கூடாது என்று விரட்டியடிக்கிறார்கள்.

சரித்திரத்தையே அவமானப்படுத்தும் சிறைக் கொடுமைகள். நாளொன்றுக்கு சராசரியாக 3 பேரை வெள்ளையரின் துப்பாக்கிகள் சுட்டுத் தள்ளுகின்றன. இறந்து 10 மாதக்

FREE E - BOOKS , www.thamizham.net.,

-களில் மட்டும் 1024 பேர் கொல்லப்பட்டதாக அரசின் அறிக்கை கூறுகிறது.

சில ஊர்வலமே சங்கங்களைப் பிரசவிக்கிற கொடுமை அங்கே உண்டு. தங்கம், பிளாட்டினம் போன்ற விலை மதிப்பற்ற கனிமங்கள் ஆப்பிரிக்க - பிரிட்டன் முதலாளிகளுக்குச் சொந்தம். நாயாக உழைத்து எடுத்துக் கொடுக்க வேண்டியதே கறுப்பர்களின் வேலை.

உள்நாட்டில் கொடுக்கும் தாக்குதல் போதாதென்று அண்டையில் உள்ள நமீபியா, அங்கோலா மீது தென் ஆப்பிரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்காக மட்டும் மக்களின் வரிப்பணத்தில் நாளொன்றுக்கு ஒரு கோடியே 20 லட்ச ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளது.

ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சில், கூட்டுச்சேரா இயக்கம், தெற்கு ஆசிய மாநாடு போன்றவை தென் ஆப்பிரிக்காவைப் பற்றி பல மணி நேரம் விவாதித்துக் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன.

உலக நாடுகளின் ஒட்டுமொத்த வேண்டுகோளை குப்பைக் கூடையில் எறிந்து விட்டு புரட்சிக் குயில் பெஞ்சமின் மொலாய்ஸை தூக்கிலிட்டுக் கொன்றது.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதைப் போல் கறுப்பு மலர்களின் வீரம் செறிந்த போராட்ட இயக்கம் பேயாட்சி புரிந்து வரும் பாசிச அரசுக்கு விரைவில் ஒரு முற்றுப் புள்ளியை வைத்து விடும் என்ற நம்பிக்கை தோன்றுகிறது.

- பு. பா. ரவீந்திரதாஸ்.

ஏனென்றால் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கென்றே சாராயக் கடைகளைத் திறந்த அப்பப்பா இது!

- நா. தென்னிலவன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வினா-விடை வியாபாரிகள்

ஜனவரி பிறந்துவிட்டால் நாளிதழ்களுக்கெல்லாம் மாணவர்கள் மீது அக்கறை வந்துவிடும். பத்தாம் வகுப்பு, பிளஸ் டூ வினாவிடைகள் பிரசுரமாகும். இவர்களைப் பொறுத்த அளவில் விற்பனையை அதிகப்படுத்துகிற பரபரப்பான செய்தி மாதிரிதான் இதுவும். பல வருடங்களுக்கு முன் 'முயல்' என்கிற சிறுவர் இதழில் 6, 7, 8 வகுப்புகளுக்கு மாதிரி வினாத்தாள்கள் வந்தன. குமுதமும் இதனைச் செய்தது. குமுதம் நிறுவனத்தைப் பொறுத்தவரை வாரம் தவறாது வருகிற ஆறு வைத்தியங்களுக்கு அவர்கள் தருகிற மதிப்புதான் இதற்கும்.

ஒவ்வொரு வருடமும் மாநில முதல் மதிப்பைப் பெற்ற மாணவன் தினத்தந்தியில் பேட்டியளிப்பான். வெற்றிக்குக் காரணம் தினத்தந்திதான் என்பான். சோப்பு விளம்பரத்திற்கு அதன் நிறுவனம் நடிகையைப் பயன்படுத்துவதற்கு இது ஒன்றும் சற்றும் சளைத்ததல்ல.

பல்கலைக் கழகத்தால் மாணவர்கள் பாதிக்கப் பட்டபோது, மாணவர்கள் மீது வன்முறை கட்டவிழ்க்கப் பட்டபோது தோன்றாத அக்கறை தேர்வுகளின் போது மட்டும் தோன்றுவதேன்? வியாபாரம் தவிர வேறென்ன?

பாடநூல்களைவிட உரை நூல்கள் அதிகம் விற்கின்றன. தேர்வு நேரத்தில் இவை யாவும் சேர்ந்து மாணவர்களைக் கெடுக்கின்றன. இவையாவும் தடை செய்யப்பட வேண்டும் என்று அவ்வப்போது பலர் குரல் கொடுத்திருக்கிறார்கள். அரசு இதனைத் தடை செய்யுமா? செய்யாது.

இதுவே வளர்ந்து அமோக லாபம் ஏற்படும் என்று அரசு கருதுமானால் அரசே உரை நூல்கள் வெளியிடும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மெரினா முதல் குமரி வரை



# மீனவர்கள்

1855- 1855 - மெரினா கடற்கரையில் மீனவர்கள் குடியேற்ற ஆண்டு என்று அரசாங்கக் குறிப்பொன்று கூறுகிறது.

ஏறத்தாழ 130 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் அழகில்லாதவர்கள் என்பதைக் கண்டுபிடித்து அரசு அறிவிக்க, மக்களாகிய நாமும், மௌன சாட்சிகளாய் வேடிக்கை பார்த்தோம்.

தமிழக வரலாற்றில் மீனவர்களுக்கு இரண்டாயிரம் வருட வரலாறு உண்டு. நெய்தல் நிலத்துப் பரதவர்கள் அவர்கள்தான்.

அந்தப் பரதவர்கள், சென்ற நவம்பர் மாதம் 4-ஆம் தேதி, மெரினா கடற்கரைக்கு அந்நியர்களென்று அறிவிக்கப்பட்டனர்.

மெரினா கடற்கரைப் பகுதி மீனவர்கள், அயோத்தியா குப்பம், மாட்டான் குப்பம், நடுக் குப்பம் என மூன்று குப்பங்களில் வாழ்ந்து வருகின்றனர். அந்த மூன்று குப்பத்து மக்களுக்கும் 4-11-85 அன்று நேர்ந்த

FREE E - BOOKS , www.thamizham.net.,

பேரிடி. அதற்கு முதல் நாள் வரையிலும் கூட அவர்களுக்கு மூடி மறைக்கப்பட்டிருந்தது.

3-11-85 இரவு 8 மணியளவில், மூன்று குப்பத்-துத் தலைவர்களுக்கும், போலீஸ் துணை கமிஷ-னரிடமிருந்து அழைப்பு வந்தது. கே. ராஜி, அன்பு குமார், இராமையா, வேணு, எத்திராஜ், சஞ்சீவி, கோபால் ஆகியோர் இராயப்பேட்டை-E2 போலீஸ் நிலையம் சென்றனர்.


அப்போதுதான் அடுத்த நாள் அரங்கேறப் போகும் அந்தக் காட்சி பற்றிய அறிவிப்பு அவர்-களுக்கு வழங்கப்பட்டது. தங்கள் தொழிலை, தங்கள் வாழ்வைப் பாதிக்கும் அந்த "அழகு படுத்தும் திட்டத்தை" அவர்கள் உறுதியாய் எதிர்த்தனர்.

அடுத்த நாள் காலை (4-11-85) எதிரி நாட்டை வளைக்க. இராணுவம் வந்ததைப் போல். அண்ணா சதுக்கத்திலிருந்து ஆல் இண்டியா ரேடியோ வரை ஒரே போலீஸ் மயம்.

காலை 7 மணியளவில், புதிய கலங்கரை விளக்கத்திற்கு அருகில், மாநகராட்சி லாரிகளில் கட்டுமரங்கள் ஏற்றப்பட்டன.

கட்டு மரங்களும், வலைகளும் -
அவர்கள் வாழ்க்கையின் ஒரே நம்பிக்கைகள்.
'காலையில் எழுந்து. குளிக்காமல் கட்டு மரத்தைத் தொடக்கூடாது' என்பது, இன்றும் அவர்களிடையே காணப்படும் மரபு.

FREE E - BOOKS , www.thamizham.net.,



அவ்வளவு புனிதமானதாக அவர்கள் அக் கட்டு மரங்களைக் கருதுகின்றனர். அந்தக் கட்டுமரங்கள், போலீஸ்காரர்களின் பூட்சுகளில் மிதிபட்டு லாரிகளில் தூக்கியெறியப்படும் போது உடைபட்டன. உடைபட்டவை அந்தக் கட்டுமரங்கள் மட்டுமல்ல; மீனவர்களின் இதயங்களும் தான்!

"நீரில் நன்றாய் மிதக்கக்கூடிய சிலவகை மரங்களை இருபது அல்லது இருபத்தைந்தடி நீளமாகத் துண்டித்து, மேல் பகுதியிலும், பக்கங்களிலும் பட்டையாகச் செதுக்குவார்கள். அப்படிச் செதுக்கப் பட்ட ஐந்தாறு மரக்கட்டைகளைப் பரப்பிய நிலையில் அடுக்கிக் கயிற்றால் கட்டப்பட்டது தான் கட்டுமரம் என்பது. இக் கட்டுமரங்களின் விலை மிக அதிகமானது. ரூ 6000 முதல் ரூ 9000 வரை ஆகிறது. வலைகளின் விலையும் அப்படித்தான். மீனவர்கள், காலத்திற்கும் கடல் நிலைக்கும் ஏற்றவாறு பல வலைகளைப் பயன் படுத்துவர். அலைவீசும் பகுதிக்கு அப்பால் சென்றே வலைகளைக் கடலில் பாய்ச்சுவர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

நீளத்திலும், பரப்பிலும் மிகப்பெரிய வலைகளையும் கூட்டுறவு முறையில் அவர்கள் வாங்கி வைத்துள்ளனர்.

ஏறத்தாழ 20 பேர், கரையில் நின்றபடி வலையின் ஒரு பக்கத்தைப் பிடித்துக் கொள்ள, மற்றொரு பக்க வலையை படகில் ஏற்றிக் கொண்டு போய் ஆழ் கடலில் அதனைப் பாய்ச்சுவர். கரையில் இரண்டு பக்கக் கயிறுகளுக்கும் இடையே 500 மீட்டர் இடைவெளி இருக்கும். நான்கு மணி நேரம் போராடி மீன்களோடு வலையை கரைக்கிழுப்பர். மீன்கள் வலைகளை அறுத்து விடுவதும் அடிக்கடி நிகழும் சம்பவம்.

இவ்வளவு விலையுயர்ந்த வலைகளையும், கட்டுமரங்களையும் எப்படி வாங்குகின்றனர்? கூட்டாய்ச் சேர்ந்து கடனுக்குத்தான் வாங்குகின்றனர்.



கவிஞர் சீனையின் மைந்தன்
சொல்கிற மாதிரி,
"எங்கள் வலைகள்
வாங்கிகளுக்குச் சொந்தம்.
வத்திப்பெட்டி வீடுகள்
வாரியத்துக்குச் சொந்தம்
நாங்கள்
வாரிவரும் மீன்கள் —
மாரிக்காலம் பார்த்து
எங்கள் உழைப்பினை
விலைக்கு வாங்கிக் கொண்ட
வியாபாரிகளுக்குச் சொந்தம்.
காலகாலமாய்,
வறுமை மட்டுமே இந்த
மீனவர்களுக்குச் சொந்தம்.

(தொடரும்)

-சுபவீ

FREE E - BOOKS , www.thamizham.net.,

# உங்கள் கணவர் நூறாண்டுகள் வாழ வேண்டுமா?

கடைப்பிடியுங்கள் கீழ் கூறப்படும் எளிய முறைகளை.

1. உங்கள் கணவரின் எடை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்

2. பொதுவாகக் கொழுப்பு குறைவான உணவு வகைகளே அவருக்குக் கொடுங்கள். வெண்ணெயைக் குறையுங்கள். தாவர எண்ணெய் நல்லது. புலாலை முற்றிலும் விட்டுவிடுவது அல்லது குறைப்பது நலம்.

3. இதய மாரடைப்புக்குக் காரணங்கள் பலவற்றுள் புகை மிக முக்கிய காரணமாதலால் புகைபிடித்தலை விடச்செய்யுங்கள்.

4. அலுவலக நெருக்கடிகளில் சிக்கிக் கொண்டு உங்கள் கணவர் இல்லத்திற்கு வருவதால் அவருக்கு நெருக்கடி நிலையை வீட்டிலும் உருவாக்காதீர். (STRESS)

5. எளிய உடற்பயிற்சி, யோகாசனம், பிராணாயாமம் செய்யச் சொல்லுங்கள்.

6. கணவருக்கு உடல்நலக் குறைவு என்றால் உடனே மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள்.


7. பொதுவாக, காப்பியைக் குறைப்பது நல்லது.

— சா. பா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தலைக்குத் தலை வித்தியாசமா?

பல ஆண்டுகளுக்குப் பிறகு பலவித விவாதங்கள், ஒத்தி வைப்புகள், மிரட்டல்களுக்குப் பிறகு ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் மொபட் ஓட்டுபவர்கள் தலைக்கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டது. மொபட் ஓட்டும் பெண்கள் கூட எல்லா வண்டியோட்டிகளையும் போலவே தாமும் தலைக்கவசம் அணிந்தே செல்கின்றனர்.



ஆனால் இவ்வாக னங்களில் பின்னால் அமர்ந்து செல்பவர்களி ல் ஆண்கள் மட்டுமே கட்டாயமாகத் தலைக் கவசம் அணிகின்றனர். ஆனால் பின்னால் அமரும் பெண்களுக்கு மட்டும் தலைக்கவச அணிவது கட்டாயமில்லையாம். உயிரைப் பாதுகாக்கவே தலைக் கவசம் என்பது அரசின் கொள்கையாயின் அது ஆண்களின் உயி ரைக் காப்பாற்ற மட்டும்தானா? பெண்கள் தலை , செத்தால் பரவாயில்லையா?

ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா என்று கேள்வி கேட்கும் பெண்கள் கூட அரசின் இந்தப் பாரபட்சம் பற்றி முறைமுறைத்ததாகத் தெரியவில்லை. சீவி முடித்து சிங்காரித்த தலையின் அழகை தலைக்கவசம் மறைத்து விடுமே என்று அதனை அணிய மறுக்கும் பெண்கள், தலை இருந்தால் தானே தலையை அழகு செய்ய முடியும் என்று சிந்தித்துப் பார்க்கட்டும். டம்பத்திற்காகப் பை சுமக்கும் போது உயிர் காக்கும் தலைக் கவசத்தை சுமக்க இயலாதா?

இத்தகைய பெண்களிடையே அத்தி பூத்தாற்போல சில பெண்கள் தலைக்கவசம் அணியாமல் இவ்வாகனங்க-

FREE E - BOOKS , www.thamizham.net.,

-ளில் பின்னால் அமர்ந்து செல்வதில்லை. அதனைச் சுமையாகக் கருதுவதுமில்லை. இவர்கள் பாராட்டுக்குரியவர்கள்; பின்பற்றப்பட வேண்டியவர்கள்.

சிக்கனம், நேரக்குறைவு கருதி குடும்பத்துடன் இவ்வாகனங்களில் பயணம் செய்யும் மத்தியதர வர்க்கத்தினரின் உயிருக்கு அரசாங்கம் எவ்வாறு பாதுகாப்பு தரப் போகிறது? ●●● —நிலா.




அன்பு செலுத்திய ஒரு பெண்ணுக்காக தனது இதயத்தையே அவளுக்குக் காணிக்கையாக்கி விட்டு தனது உயிர்த்துடிப்பை நிறுத்திக் கொண்டான் பதினைந்தே வயதான ஒரு பையன்.

தனது உடலை இயங்க வைத்துத் துடித்துக் கொண்டிருக்கும் இதயம் தன்னோடு பழகி அன்பு செலுத்திய தன் சிநேகிதனின் இதயம் தான் என்பது அந்த 14 வயதுப் பெண்ணுக்கு இன்னமும் தெரியாது.

நெஞ்சை நனைக்கும் இச்சம்பவம் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் நடந்துள்ளது.

கார்சா பெலிப் என்பது அப்பையனின் பெயர். டோனா அஸ்லோக் என்பது அப்பெண்ணின் பெயர்.

திடகாத்திரமாக இருந்து வந்த டோனா அஸ்லோக் திடீரென நோய்வாய்ப்பட்டாள். அவளைச் சோதித்த டாக்டர்கள் அவளது இருதயத்தில் சதை வளர்ந்திருக்கிறது என்றும் மாற்று இருதயம் பொருத்தினாலொழிய அவள் குணமடைய முடியாது என்றுகூறி விட்டார்கள். மாற்று இருதயம் ஒன்றுக்காக டோனா காத்திருந்-

FREE E - BOOKS , www.thamizham.net.,

தான்.

இந்தச் சமயத்தில் காஞ்சா பாபுவும் திடீரென உடல் நலம் குன்றினான். அவனைச் சோதித்த டாக்டர்கள் அவனது மூளையில் இரத்தம் கசிகிறது என்று கூறினர். எவ்வளவோ சிகிச்சையளித்தும் பயனில்லாது போகவே அவனது மரணம் டாக்டர்களால் உறுதி செய்யப்பட்டு விட்டது. தனது நாட்களை எண்ணிக் கொண்டிருந்த காஞ்சா தனது இதயத்தை டொனாவுக்குத் தந்து உயிர் வாழச் செய்யுங்கள் என்று வேண்டிக் கொண்டான்.

இதன் பேரில் அவனது இதயம் உடனடியாக அகற்றப்பட்டு டொனாவுக்குப் பொருத்தப்பட்டது. காஞ்சா பாபு இதன் பின்னர் இறந்து போனான்.

மாற்று இதயம் பெற்ற டொனா இப்போது உடல் நிலை தேறி மருத்துவமனை படுக்கையில் இருந்தவாறு ஐஸ்கிரீம் சாப்பிடுகிறாள். ஆனால் காஞ்சா பாபுவின் மரணமோ அவன் தான் இருதயத்தை தனக்கு காணிக்கையாக்கி விட்டுப் போயிருக்கிறான் என்ற உண்மையோ அவளுக்குத் தெரியாது.

அதிர்ச்சியால் அவளுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தில் மருத்துவ அதிகாரிகளும் அவளது குடும்பத்தினரும் இந்த உண்மையை அவளிடமிருந்து மறைத்து விட்டார்கள்.

**இதயத்தைத் தந்த [illegible]**
**[illegible] உயிர் தந்த [illegible]**

இரண்டு சிறு பிள்ளைகளின் கதை தானே என்று இதனை ஒதுக்கி விடுமா மனம்?

FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுகதை

# நட... ஸ்டேஷனுக்கு!

நல்ல கூட்டம். நெரிசலை விலக்கி உள்ளே எட்டிப் பார்த்தேன். ஒரு பாம்பாட்டி கீரியையும் பாம்பையும் சண்டையிடச் செய்வதாக வாக்களித்துக்கொண்டிருந்தான். பிறகு, தாயத்தைப் பற்றி விரிவுரையாற்றினான். சர்வரோக நிவாரணியாகிய அதன் விலை ரூ. ஒன்று மட்டுமே என்றான். தேர்தல் அறிக்கையைப் போலக் கவர்ச்சியான பேச்சால் வசீகரிக்கப்பட்ட சிலர் வாங்கத் தொடங்கினர்.

அந்தக் கூட்டம் போக்குவரத்துக்கு இடையூறாய் இருந்தது. சற்று நேரத்தில் விசில் சப்தம். அதைத் தொடர்ந்து ஒரு கான்ஸ்டபிள் வந்தார். "இங்கே என்னடா கூட்டம்"?.." உள்ளே புகுந்தார். "எல நீயா... மூட்டைய கட்டுடா. உன்னால பெரிய தொந்தரவா போச்சு! என்னடா மலைச்சி நிக்கற. ம்... சீக்கிரம்!" கூட்டத்தைக் கலைக்க முற்பட்டார். பாம்பாட்டி முகத்தில் பயமும் ஏமாற்றமும் நிறைந்தன. "என்னசார், மீஸன்டா இருக்கீங்க - இதைப் போயி வேடிக்கை பார்க்கிறீங்க... போங்க சார்-போய்யா... போடா..."

"போலீஸ் ஐயா! என் பொழப்பக் கெடுத்துடாதீங்க! இத வச்சுதான் என் பொழப்பு ஓடுது. இன்னைக்கு ரொம்பக் கூட்டம். இருந்துச்சு... தாயத்து நெரம்ப..."

"ஒம் பொழப்பு நாசமா போனா எனக்கு என்னடா? ட்ராபிக் ஜாம் ஆயிடுச்சே!"

FREE E - BOOKS , www.thamizham.net.,

" சொல்றேன்னு கோவிச்சுக்காதீங்க!
அடுத்த தெருவிலே கட்சிக் கூட்டம் நடக்குது...
மைக்கெல்லாம் வச்சி பேசறாங்க.. நடு
ரோட்டிலே கொட்டாயி போட்டு ருக்காங்க.
பஸ்ஸெல்லாம் திருப்பி விட்டிருக்கீங்க.
அவங்களோட பொழப்புக்கு நீங்க உதவியா
இருக்கீங்களே..."

கான்ஸ்டபிள் திகைத்தார். விபரம்
புரிஞ்ச பாம்பாட்டியா இருப்பான் போலிருக்கு
இவனை வெளில வைக்கக் கூடாது!

" நட ஸ்டேஷனுக்கு!..."


- நா. தென்னிலவன்

---

ஒரு ஆலயத்தினுள், "காலணிகளைக் கழற்றி
விட்டுச் செல்லும்படி" அதிகாரி ஒருவர் இங்கே
உத்தரவு பிறப்பித்தாராம். அந்த உத்தரவை கழற்றி
நிறைவேற்ற நியமிக்கப்பட்ட ஊழியர், விட்டுத்தான்
காலணிகளே இல்லாமல், வெறும் உள்ளே செல்ல
கால்களுடன் வந்து, கோயி வேண்டும். நீங்கள்
லுக்குள் நுழைந்த பக்தர் வீட்டில் காலணிகளை
ஒருவரை உள்ளே போக விட்டு விட்டு வந்திருந்தால்
அனுமதிக்கவில்லை- போய் அணிந்து வந்து, இங்கே
யாம். கேட்டதற்கு, கழற்றி வைத்து விட்டுச் அதன் பின்
அதிகாரியின் கோயிலினுள் செல்லலாம் என்று கூறி
ஆணைப்படி அந்த ஊழியர் அவரை அனுப்பிவிட்டாராம்.
காலணி- "அரசின் ஆணைகளை சரிவரப் புரிந்து
களை கொண்டு, சரியாக நிறைவேற்ற அரசு ஊழியர்
களுக்குப் போதுமான பகுத்தறிவு இல்லை" என்ப
தற்கு அலைபரப்பு அமைச்சர் வி.என். கட்கில் கூறிய
மேற்கோள்.

போய் காலணிகளை எடுத்து வா!

FREE E - BOOKS , www.thamizham.net.,




## புத்தகப் பிழிவு

பக்கங்கள்: 70

ஆசிரியர்: அ. மார்க்ஸ்
வெளியீடு: தோழமை,
20, கொண்டான் பாளையத் தெரு,
குடந்தை - 612 001.
விலை: ரூ. 4.50.

# நமது கல்விப் பிரச்சனைகள்

– புதிய கல்விக் கொள்கை பற்றிய ஒரு பார்வை.

புதிய கல்விக் கொள்கையின் வாக்கு மூலங்களில் சில நேர்மையானவை. கல்வியின் அவலத்திற்கு அது காட்டும் காரணங்களில் சில: விஷமத்தனமானவை. மேம்பாடு கருதி அது முன் வைக்கும் அணுகுமுறைகள் பெரும்பான்மையும் மோசடித் தனமானவை.

அனைவரையும் எழுதப் படிக்கத் தெரிந்தவராக்கும் அவசியமான ஆரம்பக் கல்விக்குச் செலவிடும் நிதி ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் குறைந்து கொண்டே வருதல்; கிராமப்புறத் தொடக்கப் பள்ளிகளில் நிலவும் மோசமான வசதியின்மை; வறுமை; பசி; நோய்; தாழ்வு மனப்பான்மை இவற்றால் மாணவ, மாணவியர் கல்விப் பயன் பெறாமை; ஊதியம், சமூக மதிப்பீடு இவற்றில் பயிற்றுவோரின் தாழ்வு நிலை இவற்றை அப்படியே ஏற்றுக் கொள்வது நேர்மை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆண்டு தோறும் அதிகமாக வளர்ந்து வரும் இராணுவச் செலவு, விவசாயம், நீர்ப்பாசனம், தொழில் போன்ற துறைகளில் நவீனப்படுத்து தல் என்ற பெயரிலும், மற்றவற்றிலும் ஏற்படும் பல்லாயிரங்கோடி செலவினங்கள் இவற் -றைக் கருதாமல், நிதிப்பற்றாக் குறையை ஈடு செய்ய தனியார் வணிகக் கல்வியை ஊக்குவிக்க முற்படுதல் - விஷமத்தனமானது.

நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தை நீக்குதல். தனியார், வெளியார் கொலைப்பிடியைப் போக்குதல், வேலையின்மைக் கொடுமையை நீக்குதல், இவற்றைச் சுட்டிக் காட்டாதது- போலித்தனமானது.

அடிமட்ட மக்களின் ஏழ்மையைப் போக்கு தல், உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்குதல், கல்வியை ஜனநாயகப் படுத்துதல், நிதி ஒதுக் கீட்டை அதிகரித்து ஆரம்பக் கல்வியை வளர்த்தல், தாய் மொழியைப் பயிற்றுமொழியாக்கு தல், ஆசிரியர் மாணவர்க்கு அரசியல், சிவில் உரிமைகளை வழங்குதல் -

இவற்றைச் செய்தால் கல்வி நிலை உண்மையிலேயே மேம்படும்.

— சரவணபவன்.

தமிழகமெங்கும் வீடுகள், வீட்டுமனைகள் வாங்க-விற்க தொடர்பு கொள்க: எம். வெங்கட், 24. திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர் சென்னை- 600 053. -வரி விளம்பரம்-

# நமது இசை மருத்துவம்

நரம்பு மண்டலத்தைச் சீர்படுத்துவதில் இசையின் மருத்துவ குணம் மகத்தானது. எல்லா உணர்வுகளையும் தூண்டவும் அதே நேரத்தில் அடுக்கவும் அதற்குரிய இசை உண்டு.

நரம்பு சம்பந்தமான கோளாறுகள், சிறப்பாக நரம்புத்தளர்ச்சி, சோகமான நிகழ்வால் ஏற்பட்ட அதிர்ச்சி இவற்றைப் போக்கடிக்க இதமான இசையை ரசித்துக் கேட்டால் வேகமான பலன் தெரியும்

இசை மருத்துவச் சிகிச்சையின் முதல் தரமான முறை சீர் இசைக்கருவியை நோயாளியே இயக்கல் அல்லது பாடுதலாகும். இது முடியாதவர்களே இசையைக் கேட்டு ரசிக்க வேண்டும்

மசாசூட்டஸ் என்ற அமெரிக்க நகரில் ஒரு பல் மருத்துவர் இன்னிசை எழுப்பியே நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குப் பல் பிடுங்கல் பல்லிடுக்கு நிரப்பல்களை செய்துள்ளார்; மயக்க மருந்தோ, வலி குறைப்பு மருந்தோ கிடையாது. நம்மவர்கள் சோதிக்கட்டும்.

"ஹிஸ்டீரியா" நோயின் அறிகுறிகள் தோன்றினால், நரம்புக் கருவிகளின் இன்னிசையை அடிக்கடி கேட்பது நல்லது. நரம்பு இசை 'ஹிஸ்டீரியா'வை விரட்டும்.

கடுமையான தலைவலி - அது மைக்கிரேன் என்ற தொடர் தலைவலியானாலும் சரி. ஒரு நபரே மீட்டும் (சோலோ) வயலின் இசையைத் தொடர்ந்து கேளுங்கள். வயலின் தலைவலிக்கு மாமருந்து.

இசையால் பசு அதிகமாக பால் கறக்கிறது - செடி செழிக்கிறது என்றால், மனிதர்கள்? போஸ்டனில் இசையைக் கொண்டு சுகப்பிரசவம், மயக்க மருந்தின்றி அறுவை சிகிச்சை - ஏன் இதயச் சிகிச்சையே நடக்கிறது.

உடலுக்கும், மனதிற்கும் வரும் எந்த நோயையும் குணப்படுத்தும் ஆற்றல் இசைக்கு மட்டுமே உண்டு! எந்த நோயானாலும் இசையில் கலந்து ஊடுருவுங்கள். உடலில் இசை பரவும் போது நோய் ஓடி விடும்.

[அடுத்து: நமது வண்ண மருத்துவம்] — சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டி இலவச படிப்பகம்

இடம்: 203 எம்.டி.எச் சாலை, அம்பத்தூர்

தொடக்கவிழா: 2.2.1986 காலை - 10 மணி

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும்: "சுட்டி" 1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 28, 30, 54 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50 வது இதழ் 0.75 காசு மற்ற இதழுக்கு 45 காசு விதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.


**வேல் டைப் பௌண்டரி**

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. பேசி: 37693


FREE E - BOOKS , www.thamizham.net.,



# தலைமை வழிபாடு

அரசியல், திரைத்துறை ஆகியவற்றைச் சார்ந்தவர்கள் யாரேனும் இறந்து விட்டால், அதற்காக உலகமே போய் விட்டது என்று இந்தியர்கள் ஒப்பாரி வைக்கிறார்கள். அவர்கள் விரும்பும் அரசியல், திரையுலகைச் சார்ந்தவர்கள் வாழும் போது, அவர்கள் மேல் மிகு மோகம் கொண்டு அலைகிறார்கள். திரைப்பட நடிகை முகத்தைப் பார்ப்பதற்காகப் பல்லாயிரக் கணக்கானோர் முண்டியடித்து ஓடுகிறார்கள். அரசியல் தலைவர்களையும், திரை நடிகையர்களையும் சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து வணங்குகிறார்கள். அவர்கள் அணிந்து கசக்கி எறியும் மாலையைக் கூட, மார்போடு அணைத்துத் தழுவிக் கொள்கிறார்கள். அவர் இட்லி சாப்பிடுகிறாரா, தோசை தின்கிறாரா என்றெல்லாம் தலைவர்களின் உள் வாழ்வு நிகழ்ச்சிகளைப் பக்கம் பக்கமாக அச்சிடும் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்து பரவசமடைகிறார்கள். இந்தத் தலைமை வழிபாடு- அரசியல், திரையுலகம் என்று தொடங்கி, தற்போது- அனைத்துத் துறைகளிலும் பல்கி வருகிறது. தலைமை வழிபாட்டின் தீய விளைவுகளில் தலையாயது மெய்ப் பொருள் காணும் போக்கு அழிந்து, பொருளைச் சொல்லும் மனிதனைப்

FREE E - BOOKS , www.thamizham.net.,

பார்க்கும் பார்வையாகப் போய் விடுவதுதான். 'எது' என்பது முதன்மை பெறுவதற்குப் பதிலாக 'எவன்' என்பது முதன்மை பெற்று விடுகிறது. எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், எப் பொருள் எத்தன்மைத்தாயினும் மெய்ப் பொருள் காண வேண்டிய மக்கள், சொன்ன பொருளை மறந்து, சொன்னவன் யாரென்று அன்னவன் மேல் ஆசை கொண்டு விடுகின்றனர். இதனால் தத்துவ வழிபாடு, தலைமை வழிபாடு தோன்றிக் கெட்டியாகி விட்டது. தன்னை நம்பாத மனிதக் கூட்டமே- அதாவது, தன்னம்பிக்கை இல்லாத மனிதக் கூட்டமே தலைமை வழிபாட்டைக் கொள்ளும். தன்னம்பிக்கை அழிந்த நிலையில், அவ்வாறு அழிந்த மனித இனம் முன்னேறுவது எங்ஙனம்?

தலைமை வழிபாட்டின் இன்னொரு தீய விளைவு மக்களைச் சுதந்திர மக்கள் ஆக்காமல் சார்பு மக்களாக முடக்கிவிடுகிறது. எனவே, தானாகச் செய்யும் நிலை ஒடுங்கிப் போய், தலைவனே அனைத்தையும் செய்வான் என்ற மட நம்பிக்கை முகிழ்த்து, முதிர்ந்து விடுகிறது. பிறிதொரு சீரழிவு, மக்களால் நம்பப்பெறும் தலைவர்களைத் தவிர அவர்களுக்கு இணையாகச் சிற்சில சமயங்களில் அவர்களுக்கும் மேலாகப் பெரும் திறமை பெற்றவர்கள் தலைமை வழிபாட்டில் மூழ்கி இருக்கும் மக்களின் அலட்சியத்தாலும் வழிபாட்டிற்கு உள்ளான தலைவர்களின் சுயநலத்தாலும் பொதுத் திறமையாளர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். - டாக்டர். க.ப. அறவாணன்.

(பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள்)

FREE E - BOOKS , www.thamizham.net.,

### ADDITIONAL SURCHARGE

கொசுறு கேட்கும்
கொத்தவால் சாவடிப்
பழக்கத்திற்கு
அரசு கூட
அடிமையாகியது.

- கௌதமன்

நூல்: எழுபது கோடியில் இவனும் ஒருவன்

### பாதைகள்! பதக்கங்கள்!

நமது
மாநகராட்சி
ரோடுகளில்
நடந்து பழக்கப்
பட்டதாலோ
என்னவோ...
இன்று நம்மவர்கள்
மலையேறும்
போட்டிகளில்
மகத்தான
வெற்றி பெறுகி-
றார்கள்

- கோவை கிருபாகரன்

நூல்: பாடகன் வருகிறான்

### மழையோடு கூட...

மழை மட்டும் வந்திருந்தால்
நானும்தான் மகிழ்ந்திருப்பேன்...
என் மனைவிக்கு
நோயையும் அல்லவா
அது
கூட்டி வந்திருக்கிறது?
விதைக்காக
விட்டு வைத்திருந்த
தானிய மூட்டைகள் எல்லாம்
தற்போது
மாத்திரைகளாக
மாறி விட்டன!

- இரண்டாம் நக்கீரன்

நூல்: ஒரு தீக்குச்சி வெளிச்சத்தில்



### பனி

அந்தியில் நிலவால்
பதவிப் பிரமாணம்
செய்து வைக்கப்பட்டு
பகலில் சூரியனால்
கலைக்கப்படும்
மந்திரி சபை.

- பொதிகைத் தமிழரசன்

நூல்: ரத்த மழை

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஜாதகம் "சோதிக்கப்படுகிறது"

எவ்வளவுதான் எப்படித்தான் முட்டிக் கொண்டாலும் கோள்களே நமது விதியை நிர்ணயிக்கின்றன என்பதற்கு விஞ்ஞான ரீதியான சான்று இதுவரை இல்லை. ஏனோ இந்த உண்மை உலக கம்ப்யூட்டர்களில் பெரும்பங்கு வகிக்கும் நமது இந்திய மூட்டர்களுக்குப் புரிவதேயில்லை.

ஜோதிடம் விஞ்ஞான அடிப்படையில்தான் கணிக்கப்படுகிறது என நிரூபிப்பதற்காக உலகின் பெரிய ஜோதிடர்களுக்கு அண்மையில் அமெரிக்காவில் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பௌதீகப் பேராசிரியர் டாக்டர் கார்ஹான் என்பவர் உலகிலுள்ள 28 பெரும் ஜோதிடர்களை அழைத்தார். 300 பேர்களின் ஜாதகங்களைப் பரிசீலிக்கச் செய்தார். [illegible]தில் அந்த 300 பேர்களின் தனி மனிதப் பண்புகளை அறிய மனோதத்துவச் சோதனைகளும் நடத்தப்பட்டன. இரண்டு வித சோதனைகளின் முடிவுகளும் அந்தத் தனி மனிதர்களிடம் காண்பிக்கப்பட்டு எது அவர்களுக்கு அதிகம் பொருந்துகிறது என்றும் ஆராயப்பட்டது.

இந்தச் சோதனை பற்றிய செய்தியும் அதன் முடிவும் உலகின் பிரசித்தி பெற்ற விஞ்ஞானப் பத்திரிகையான "நேச்சர்" (NATURE) இல் வெளியானது. "ஜாதகங்கள் எவ்வளவு துல்லியமானவை என்ற சோதனையின் முடிவு ஒரு மனிதனின் பிறந்த நட்சத்திரத்திற்கு அவனது தனிமனிதப் பண்புகளை நிர்ணயிக்கும் ஆற்றல் அறவே கிடையாது என்பதுதான்" என்கிறார் 'டைம்' பத்திரிகையின் விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்.

இனியாவது எடுத்ததற்கெல்லாம் ஜாதகத்தை நாடுபவர்கள் அவற்றை நாக்கை வழித்துப் போடப் பயன்படுத்துவார்களாக.

— நிலா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# உயிர் காக்கும் வெடிகுண்டு

வெடி குண்டுகளால் மனித இனம் அழிக்கப்படுவதை மட்டுமே இதுவரை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் தீயை அணைத்து மனித உயிர்களைக் காக்கும் வெடிகுண்டுகளை மேற்கு ஜெர்மனி உலகுக்கு அளித்துள்ளது.

இந்த தானியங்கி குண்டுகள் முக்கியமாகத் தரையிறங்குகின்ற அல்லது விமான நிலையத்திலிருந்து கிளம்புகின்ற விமானங்களில் திடீரென ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுப்பதில் இணையற்றவை. விமான நிலையத்திலிருந்து 80 கி.மீ தூரம் வரை ஏற்படும் தீ விபத்துக்களை இவை தடுக்கும்

விமானத்திலிருந்து தீ பற்றிய அபாய அறிவிப்பு கிட்டியவுடன் மணிக்கு 360 கி.மீ. வேகத்தில் இவை செயல்பட ஆரம்பிக்கும். எங்கிருந்து அபாய அறிவிப்பு வந்துள்ளது, தீயின் அளவு இவையெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் கணிக்கப்பட்டு விடும். ஒவ்வொரு குண்டினுளும் 500 கிலோ எடையுள்ள தீயணைக்கும் பொருள் அடங்கியுள்ளது. தீயின் வெப்பம் நெருங்கியதும் இப்பொருள் நுரையாகி தீயை அணைத்து விடும். இத்தனித்தன்மை கொண்ட இவை தீயணைப்பு எஞ்சின்களை விட சுறுசுறுப்பானவை. ஆற்றல் மிக்கவை.

இக்குண்டுகளை வைக்க ஆகும் செலவு 1,25,000 பவுண்கள். ஒரு பெரிய தீயணைப்பு எஞ்சினின் விலையில் இது பாதி தான். தீயை அணைத்ததும் இக்குண்டுகளை வீசும் ஏவு கணைகள் பாராசூட்டில் புறப்பட்ட இடத்திற்கே திரும்ப வந்து மீண்டும் வேலை செய்யத் தயாராகி விடும். — நிலா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பெட்ரோலுக்கும், டீசலுக்கும் மரண அடி

**பெட்ரோலுக்கு பதிலாக தண்ணீரால் ஓடுகின்ற கார் பிலிப்பைன்சில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.**

நீரினால் ஓடும் காரை பிலிப்பைன்ஸ் பொறியியலாளர் டேனியல் டிங்கில் (வயது 52) கண்டு பிடித்துள்ளார்.

பெட்ரோலுக்கும் டீசலுக்கும் எதிராக பெரும் புரட்சியை இந்தக் கார் ஏற்படுத்தக்கூடும். பெட்ரோலைக் கொண்டு கார் பரேட்டரை இயக்கும் கருவிகளை தண்ணீரால் இயங்கும் வண்ணம் டேனியல் மாற்றியமைத்துள்ளார்.

இந்த முறையில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் இன்ஜின்கள், கோடிக் கணக்காக எண்ணெய்க்கு செலவிடப்படும் நாட்டின் டாலரை மிச்சப்படுத்தும் என்று டேனியல் கூறினார்.

அரேபிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளிடமிருந்து டிங்கிலுக்கு நீரில் ஓடும் கார் தயாரிப்புக்கான அழைப்புக்கள் குவிந்துள்ளன.

விண்வெளி தொழில் நுட்பத்தில் புதியதோர் வளர்ச்சியாக நிலையாக இயங்கும் இன்ஜினைத் தயாரிக்கும் முறையையும் வெளியிட்டுள்ளார்.

–ராய்ட்டர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

● நகரத்தை அழகுபடுத்துவதற்காக சென்னை ஜி.எச் ஐ அப்புறப்படுத்தாவிட்டாலும், நரக வேதனைகளை அனுபவிக்கும் நோயாளிகளுக்காகவாவது ஜி.எச் ஐ மாற்ற வேண்டியது அவசியம்.

— எஸ்.டி. ராஜன், 4, காந்தி தெரு, ஆறுமுகநேரி - 628202

● பிரபல வார இதழ்கள் புதுக்கவிதையைத் துணைக்கோளாக்கி சீரழிக்கின்றன என்ற எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் கருத்து 100க்கு 100% சரியானதே!

— இளந்தீபன், 32, மேற்கு சாலைத் தெரு, கும்பகோணம்.

● ஒரு லட்ச ரூபாய் முதலீட்டிற்கு சுட்டி தன் ஆத்மாவை விற்றுவிடவில்லை என்பதறிந்து பெருமிதம் கொண்டேன்.

— கோ. இரத்தினவேலு, 4-சி. விவேகானந்தர் சாலை, நெய்வேலி - 607 801.

● சுட்டி முழுக்க அழகுநல வெளிப்பாடுகளே உள்ளன. சற்று கலை நய வெளிப்பாடுகள் 'இடைப்பாடுதலாக' இருக்கலாம் - தவறில்லை. (உ-ம்) கவிதைகள், ஜோக்குகள், நல்ல இலக்கியத் தொடர்கள் (மொழி மணச் சிறப்புடன்.)

— இந்திரா சௌந்தர்ராஜன், 21-A, நாடார் தெரு, காரியாபட்டி -10

● சிந்தனைச் சந்தை, வாசகர் கார்டூன், எரியும் பிரச்னை, எந்த ஐயத்திற்கும் பதில் போன்றவற்றை இடையில் நிறுத்தி விட்டீர்களே. அண்ணாவைப் பற்றி முழுவதும் பாராட்டுக்குரியது. — ஜி. நாகராஜன், சத்திய மங்கலம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பிரச்சனையாகும் பிச்சைக்காரர்கள்





தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்கள் மேல்பார்வைக்கு கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவினராகக் காட்சியளிக்கி-றார்கள்.

1) நோய் பரப்பும் வியாதியஸ்தர்கள்
2) உடல் ஊனமுற்றவர்கள் (விழியற்றோர் எண்ணிக்கை இதில் மிக அதிகம்.)
3) சோம்பேறிகள்.

இவர்களுக்கு மறுவாழ்வு கிடைக்க அரசு கீழ்க் கண்டவாறு திட்டமிட்டுச் செயல்படுவது அவசியம்.

1) பிச்சைக்காரர் மறுவாழ்வுக்குத் தனித்துறை ஒன்று உடனடியாக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.
2) தமிழகத்தில் நடமாடும் அனைத்துப் பிச்சைக்காரர்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட வேண்டும்.
3) வியாதியஸ்தர்கள், ஊனமுற்றோர்கள் இவர்களுக்கு தனி முகாம்கள் அமைத்து அங்கு அவர்கள் அடிப்படை வசதிகளுடன் வாழ ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்.
4) சோம்பேறிகளுக்கு "திறந்தவெளிச் சிறைச்சாலை" போன்றதோர் அமைப்பு ஏற்படுத்தி கட்டாய உழைப்பு தர ஏற்பாடு செய்தல் வேண்டும்.

இத்தகைய ஏற்பாடுகளால் சமுதாய சீரழிவுக்கு உதவும் 'பிச்சைக்காரர்கள்' எனும் முத்திரையின் கீழ் இயங்கும் சாக்கடைப் பேர்வழிகள் தமிழகத்தை விட்டு ஓடி விடுவார்கள்.

நமது பாவங்களுக்குப் பிராயச்சித்தம், தர்மம் என்றெல்லாம் கூறிக்கொண்டு பிச்சையிடுவதை புனிதமாக்குவதை மதச்சார்பற்ற இந்திய அரசு கண்டிக்க வேண்டும். செய்யுமா?

— வெங்கட் - மோகன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

மதுரை பல்கலைக்கழக

# அஞ்சல் வழிக் கல்வி

வாசகர் குரல்

மதுரை காமராஜ் பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்வி தொடர்பு துறை மூலம் படிக்க முதல் தவணைத் தொகை ஜூன், ஜூலை மாதங்களில் வசூலிக்கப்பட்டது. ஒரே ஒரு முறை (சில) பாடங்கள் அனுப்பப்பட்டன. மீண்டும் உடனே 15-11-85க்குள் இரண்டாம் தவணைக் கட்டணமும், தாமதமாயின், தாமதக் கட்டணத்துடனும் 15-12-85க்குள் வசூலிக்கப்பட்டது. அதே சமயத்தில் 14-12-85, 15-12-85 தேதிகளில் "செமினார்" வட ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை உட்பட சில மாவட்டங்களில் இருந்து படிப்பவர்களுக்கு சென்னை, வைஷ்ணவக் கல்லூரி மையமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட நாளில், நேரத்தில் "செமினார்" வகுப்புகள் நடைபெறவில்லை. சரியான காரணம் இல்லாமல் 21-12-85, 22-12-85 தேதிகளில் நடப்பதாக அறிவிப்புப் பலகையில் இருந்தது. இதற்கு முறை காரணமாக இருப்பினும் முறை பற்றி அறிவிக்கப்பட்ட உடனே வானொலி மூலமோ, செய்தித்தாள் மூலமோ அறிவித்திருந்தால் நூற்றுக்கணக்கானோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. வெகு தொலைவில் இருந்து வந்தவர்களும் பணம் மட்டுமே வீணாக நம்பிக்கை இன்றி திரும்பியுள்ளனர். பாடங்களை உடனுக்குடன் அனுப்பாமல் பணம் வசூலிப்பதிலேயே குறிக்கோளாகக் கொள்ளாமல் - வேகமாக உரிய நேரத்தில் செயல்பட்டால் மாணவர்களின் படிப்பு பயனுள்ளதாக இருக்கும். பிரச்சனை தீர்க்கப்பட்டால் மாணவர்கள் ஊக்கமுடன் படிக்க இயலும். — கோபால கிருஷ்ணன்

ஜோலார்ப் பேட்டை, வ.ஆ.

FREE E - BOOKS , www.thamizham.net.,

நிர்மலா சுரேஷ் - திருமகள் நிலையம், 55 வெங்கட் நாராயணா ரோடு, தி. நகர், சென்னை 600 017

**கதாசிரியையின் கதை** (13.50) லக்ஷ்மி - பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக் குளம் மேற்கு வீதி மயிலாப்பூர், சென்னை - 600 004.

**அன்றாட வாழ்வில் சுகாதாரம்** (3.50) சீனிவாசன்

**தியாகமூர்த்தி பண்டித மோதிலால் நேரு** (5.25) வை. சாமிநாத சர்மா. இந்த இரண்டும் வெளியீடு அல்லயன்ஸ் கம்பெனி, த.பெ. 617 மயிலாப்பூர், சென்னை 600 004

# எமக்கு வந்தவை

**அஸ்வமேத யாகம்** (புதுக்கவிதைகள்) (5.00) மதுபாலிகா: விஜயா பதிப்பகம், ராஜவீதி கோவை. 641001.

**ஏன் இந்த மாநாடு** (1.00) வெளியீடு: பாசிச எதிர்ப்பு தேசிய மாநாட்டுக் கமிட்டி. கிடைக்குமிடம்: மன ஓசை 24, சாரங்க பாணி தெரு, மேத்தா நகர், சென்னை 600 029

**ரத்த மழை** (புதுக்கவிதைகள்) (5.50) பொதிகைத் தமிழ்தாசன். நித்யா பதிப்பகம், 57 செல்வ விநாயகர் கோவில் தெரு. செங்கோட்டை 627809

**கிழக்கும் பின் தொடரும்** (கவிதைகள்) (6.00) இன்குலாப். விற்பனை உரிமை: கிளி முத்துப் பதிப்பகம், அம்பாள் பில்டிங்ஸ். 727 அண்ணா சாலை சென்னை - 600 006

**சீசரின் சிங்கங்கள் ரீகனின் ரம்போக்கள்** (1.00) செம்பியன் - M/s. செங்கதிர் பதிப்பகம், 119 டாக்டர் பெசண்ட் சாலை சென்னை - 14.

**பாரத அன்னை** தேசிய மாத இதழ் - ஆசிரியர் டி. ஆர். மனோகரன். 226, கோட்டைத் தெரு, பட்டுக்கோட்டை - 614601 - ஆண்டு மலர் உட்பட ஓர் ஆண்டுச் சந்தா - ரூ 10/-

**அண்ணா ஒரு சரித்திரம்** (6.90) அரு. சின்னசாமி, பூம்புகார் பிரசுரம் பிரஸ் 63 பிராட்வே, சென்னை - 600 108

**கவிப்பூக்கள்** (கவிதைத் தொகுப்பு) "ஓம்" மாத இதழ் வெளியீடு, 24A பழைய கீழ் மதுரை ஸ்டேஷன் ரோடு, மதுரை 625009. நன்கொடை 1.00

**விடியல் விதைகள்** மரபுக் கவிதைகள் (8.00) கடலூர் மணிமாறன் - மணிமேகலைப் பதிப்பகம், சின்னதாராபுரம், 639202.


**கலையும் கைத்தொழிலும்** (3.50) சக்தி. சீனிவாசன் அல்லயன்ஸ் கம்பெனி, த.பெ. எண் 617 மயிலாப்பூர், சென்னை - 600 004.

**கலைவாணியின் கவிதைகள்** (6.00) கலைவாணி (கலாவதி குணசேகரன்), கவிதா பானு, 122 - பெரியார் பாதை, சூளைமேடு. சென்னை 600 094

**தென்றலும் தலைமை ஏற்கும்** கவிதைகள் 6.00

FREE E - BOOKS , www.thamizham.net.,

கடந்த மாதம் (ஜூன்'86) சுட்டியில் கடைசிப்பக்கத்தில் வெளியாகி இருந்த கார்ட்டூனில் 4-வது கட்டத்தை நிரப்பும்படி வாசகர்களிடம் "இவருக்கு உங்கள் பதில் என்ன?" என்று கேட்டிருந்தோம். இதற்கு,தக்க பதில் எழுதி பரிசு பெறுபவர்: விஜயராகவன், சென்னை-17.




ஏன்யா, உன் சௌகரியத்துக்கு இருக்க நின்னா நாடு கெட்டுப் போவுதுங்கிறியே, உன்னை மாதிரி எல்லாரும் சௌகரியமா இருக்கத்தான் அவ-னவன் போராடறான். 'போராடாம எதுய்யா மாறும்?'- நாடு கெட்டுப் போக போராட்டக் காரங்க காரணம் இல்லே!... உன்னை மாதிரி சுய நலமிங்கதான் காரணம்.


ஆசிரியர்: கு. நாராயணபாரதி, வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், 1494. அண்ணா நகர், சென்னை-600 040. அச்சிடுவோர்: எஸ். எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137. Dr. நடேசன் சாலை திருவல்லிக் கேணி, சென்னை - 600 005.

FREE E - BOOKS , www.thamizham.net.,

FREE  E - BOOKS , www.thamizham.net.,

[illegible] [illegible] இதழ் 1, ஏப் 1986 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net FREE E BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

**SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.**

**SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.**

**SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.**

**Head Office:**
**73-A, Race Course Road,**
**Coimbatore-641 018.**

**Reg. Office & Factory:**
**Sakthinagar-638 315.**
**Periyar District.**

FREE E - BOOKS , www.thamizham.net.,